# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள் : 2.11.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ்த் துறையின் சார்பில் ‘‘அயலக தமிழறிஞர் சிறப்புச் சொற்பொழிவு’’ 2-11-2017 அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா கருத்தரங்க அறையில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சிக்கு அழகப்பாபல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தலைமை தாங்கினார். இன்று அழகப்பா பல்கலைக்கழகத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்த வருகைத் தந்துள்ள இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. எம்.எம்.எம். நிஜாம் அவர்கள் உண்மையிலேயே தமிழ் மொழி மீது மிகுந்த பற்று கொண்டவர். இலங்கைத் தமிழ், இலங்கைத் தமிழர் கலாச்சாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை நன்கு அறிந்தவர். அவ்வகையில், அயல்நாட்டில் தமிழ் பேசுகிற இளம் வயதில் துணைவேந்தராக திகழும் ஒரு இளைஞர் தமிழகத்திற்கு வந்து நம் பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்துவது மகிழ்ச்சிக்குரிய தாகும் என்றார்.




இலங்கை தென் கிழக்கு பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேரா. எம்.எம்.எம். நிஜாம் அவர்கள் தமது சிறப்புரையில், தமிழ் மொழியை வளர்ப்பதற்கு இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழக தமிழ்த் துறை ஆராய்ச்சி மாணவர்கள் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு வந்து ஆராய்ச்சி நிகழ்த்தவும், இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த் துறை ஆராய்ச்சி மாணவர்கள் காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழத்திற்கு வருகை புரிந்து ஆராய்ச்சி நிகழ்த்தவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார். இதன் மூலம், இரு நாட்டின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் போன்ற வற்றின் தொன்மையையும், தனித்தன்மையையும் கண்டறிய இயலும் என்றார்.

அழகப்பாபல்கலைக்கழக தமிழத்துறைத் தலைவர் பேரா. மு. பாண்டி அனைவரையும் வரவேற்றார். உதவிப் பேராசிரியர் மு. நடேசன் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் சு. இராசாராம், கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் அ. பாலு மற்றும் கலைப்புலமுதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பேரா.வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)